# தூத்துக்குடியில் மினி டைடல் பூங்கா!... முதல் பக்கத் தொடர்ச்சி

மாணவியர்களுக்கு மட்டுமல்லாமல், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவியர்க்கும் மாதம் 1,000 வழங்கும் வகையில் தற்போது விரிவுபடுத்தப்படுகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடியில் 30.12.2024 திங்கட்கிழமை அன்று காலை 10 மணிக்கு நடைபெறும் விழாவில் புதுமைப் பெண்திட்டத்தின் விரிவாக்கப் பணிகளைத் தொங்கி வைக்கிறார்கள். இதன் பயனாக, தமிழ்நாடு முழுவதும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வியில் சேர்ந்துள்ள 72,590 மாணவியர் மாதம் 1,000 ரூபாய் பெற்றுப் பயனடைவார்கள்.

**மினி டைடல் பூங்கா திறப்பு விழா!**

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதுமுதல் கல்வி வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருவதுடன் இளைஞர்களுக்கும், இளமங்கையர்க்கும் வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் வகையில் புதிய தொழில்களைத் தொடங்குவதற்காக இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளுக்கும் சுற்றுப்பயணம் சென்று தொழில் முதலீட்டாளர்களைச் சந்தித்துப் புதிய தொழில்களுக்கான முதலீடுகளை ஈர்த்துவருகிறார்கள்.

இதுவரை ஏறத்தாழ 10 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. 31 இலட்சம் இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 40 மாதங்களில் பல்வேறு புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். தகவல் தொழில் நுட்பத் துறை வளர்ச்சியிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள்.

**தமிழ்நாட்டில் உலகின் புகழ்வாய்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்!**

தகவல் தொழில் நுட்பத் தொழில்கள் தமிழ்நாட்டில் செழித்து வளர்ந்துள்ளன. தகவல் தொழில் நுட்பத்திற்கு புதிய கொள்கையை முதன்முதல் வகுத்த மாநிலம் தமிழ்நாடு.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தகவல் தொழில் நுட்பத் தொழில்களைப் பெருக்கும் நோக்கத்துடன் இந்தியாவிலேயே முதன்முதலாக மிகப் பெரிய டைடல் பூங்கா ஒன்றை சென்னையில் உருவாக்கி, 4.7.2000 அன்று, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களை அழைத்துத் திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, உலகின் புகழ்வாய்ந்த தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் அனைத்தும் தமிழ்நாட்டில் வந்து தொழில்களைத் தொடங்கின. பின்னர், கோவை, மதுரை, சேலம் முதலிய மாவட்டங்களிலும் தகவல் தொழில் நுட்பத் தொழில் வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டன. தகவல் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் படித்த இளைஞர்கள், இள நங்கையர் பல்லாயிரக் கணக்கில் வெளிநாடுகளிலும் தமிழ்நாட்டிலும் பெங்களூரு, ஹைதராபாத் முதலிய இடங்களிலும் வேலை வாய்ப்புகளைப் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

இந்தத் தகவல் தொழில் நுட்பத் தொழில்கள் தமிழ்நாடு முழுவதும் பரவலாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம், திருப்பூர், வேலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, சேலம், காரைக்குடி ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்களையும், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோவை ஆகிய இடங்களில் டைடல் பூங்காக்களையும் ஏற்படுத்தி வருகிறார்கள். இவற்றுள் விழுப்புரம், தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டம், விளாங்குறிச்சியிலும் தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் தமிழ்நாடு அரசுக் கட்டடங்களில் மிகப் பெரியதாக 21 தளங்களுடன்கூடிய மாபெரும் டைடல் பூங்கா கட்டப்பட்டு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவற்றைத் தொடர்ந்து, தூத்துக்குடி மினி டைடல் பூங்கா 63,000 சதுர அடி பரப்பில் தரைத் தளம் மற்றும் 4 தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பூங்காவினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (29.12.2024- ஞாயிற்றுக் கிழமை) மாலை 4.50 மணிக்கு திறந்து வைக்கிறார்.

இந்த தூத்துக்குடி மினி டைடல் பூங்கா, வாகனம் நிறுத்துமிடம், பல்வகை உணவுக்கூடம், உடற்பயிற்சிக்கூடம், கலையரங்கம், தடையற்ற மின் வசதி ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது.

ஏறத்தாழ, 32 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்த மினி டைடல் பூங்கா ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கக் கூடியதாக அமைந்துள்ளது.

தமிழ்நாட்டின் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் இந்த மினி டைடல் பூங்கா மேலும் ஒரு மைல் கல் திட்டமாக வடிவெடுத்துள்ளது.

இப்படி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தூத்துக்குடி பயணம் புதுமைப் பெண் திட்டம் விரிவாக்கம், மினி டைடல் பூங்கா திறப்பு ஆகிய நிகழ்ச்சிகள் மூலம் தூத்துக்குடி மாவட்ட மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து வரவேற்பைப் பெற்றுள்ளது.

# மாசற்ற மனதுக்கும் தூய அன்பிற்கும் சொந்தக்காரர்!

## கேப்டன் விஜயகாந்த் நினைவுநாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



சென்னை, டிச.29-

கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நினைவு நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "மாசற்ற மனதுக்கும் தூய அன்பிற்கும் சொந்தக்காரர், கேப்டன் விஜயகாந்த் அவர்கள்" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**மாசற்ற மனதுக்கும் தூய அன்பிற்கும் சொந்தக்காரராக விளங்கி, மண்ணைவிட்டு மறைந்தாலும் நமது நெஞ்சங்களில் வாழும் நண்பர் கேப்டன் விஜயகாந்த் அவர்களை நினைவு கூர்கிறேன்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமை! க.தேவராஜ் எம்.எல்.ஏ., இரா. தாமரைச்செல்வன் - என். மருது கணேஷ் முன்னிலை!

# வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் துரைமுருகன், ஆர்.காந்தி சிறப்புரை!

*வேலூர், டிச. 29 -*

*தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் உத்தரவின் படியும், துணை முதலமைச்சர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ எம்.பி ஆகியோரின் ஆலோசனை படியும் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களின் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (29.12.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெறுகிறது .*

*இக்கூட்டத்திற்கு வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார், திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ வழக்கறிஞர் அணி மண்டல பொறுப்பாளர்கள் சட்டத்துறை இணைச் செயலாளர் இரா. தாமரைச்செல்வன் Ex.M.P சட்டத்துறை துணைச் செயலாளர் என்.மருது கணேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் மாவட்ட அமைப்பாளர்கள் எம். இ. கோவிந்தராஜ் (வேலூர்), எஸ்.கே.நந்தகுமார் (இராணிப்பேட்டை), ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறித்துறை அமைச்சர் காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.*

*இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் , முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் (அரக்கோணம்), டி.எம்.கதிர் ஆனந்த் (வேலூர்), சி.என். அண்ணாதுரை (திருவண்ணாமலை) சட்டமன்ற உறுப்பினர்கள் வேலூர் மாநகரச் செயலாளரும், வேலூர் சட்டமன்ற உறுப்பினருமான கார்த்திகேயன், ஆற்காடு ஜெ. ஈஸ்வரப்பன், திருப்பத்தூர் ஏ.நல்லதம்பி, குடியாத்தம் அமுலு விஜயன், ஆம்பூர் அ.செ.வில்வநாதன் வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா. ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.*

*எனவே இக் கூட்டத்தில் வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வழக்கறிஞர் அணி மாவட்ட நிர்வாகிகள், மற்றும் முன்னாள் நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக் கும்படி அழைக்கிறோம்.*

*கூட்டத்தின் நிறைவாக திருப்பத்தூர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஏ. சி.தேவகுமார் நன்றி கூறுகிறார்.*

*இக்கூட்டத்தில் 1.வருகின்ற ஜனவரி 18ஆம் தேதி சென்னையில் நடைபெற உள்ள சட்டத்துறை 3 வது மாநில மாநாடு குறித்தும், 2. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசனை செய்யப்படவுள்ளது.*

கழகத் தலைவர் – சென்னை மேயராகப் பதவி வகித்த போது – அவரின் உதவியாளராகப் பணிபுரிந்த

# என்.ஆர்.யதுகுமார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, டிச. 29-**

**வடசென்னை - கொருக்குப் பேட்டை பகுதியைச் சேர்ந்த என்.ஆர்.யதுகுமார் அவர்களும், அவரது துணைவியாரும் ஆந்திராவில் நிகழ்ந்த சாலை விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்தனர் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயருற்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த இரங்கல் செய்தி வருமாறு:-

பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயராக நான் பதவி வகித்த காலங்களில், எனது உதவியாளராகப் பணி புரிந்த என்.ஆர்.யதுகுமார் அவர்களும் - அவர்தம் துணைவியார் திருமதி சாய் லீலா அவர்களும் - கடந்த 26ஆம் தேதி அன்று மாலை, ஆந்திர மாநிலம் - விஜயநகர் அருகே நிகழ்ந்த சாலை விபத்தொன்றில் உயிரிழந்தார்கள் எனும் செய்தியறிந்து அதிர்ச்சியுற்றேன், பெரிதும் துயருறுகிறேன்.

இவ்விணையரின் மரணத்தால் பெரிதும் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள தூத்துக்குடிக்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் அழைப்பு!



*தூத்துக்குடி, டிச. 29 -*

*தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-*

*டிசம்பர் 29,30 ஆகிய இரு தினங்களில் தூத்துக்குடி மாநகரில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தி.மு.கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி வருகை தருகிறார்.*

*இன்று (29.12.2024 - ஞாயிறு) மாலை 4.00 மணிக்கு தூத்துக்குடியில் புதிதாக கட்டப்பட்டு இருக்கும் நியோ டைட்டல் பார்க்ஐ திறந்து வைக்கிறார். அதன் பின் மாலை 5.00 மணிக்கு சத்யா நகர், கருணாநிதி நகர் வழியாக மாணிக்கம் மஹாலில் நடைபெறும் தூத்துக்குடி வடக்கு தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகளுடன் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். நிகழ்ச்சி முடித்து காமராஜ் கல்லூரி, காமராஜர் சாலை, போல்டன்புரம், G.H.ரோடு, தென்பாகம் காவல் நிலையம், பாளை ரோடு, 3ம் மைல் வழியாக சத்யா ரிசாட் செல்கிறார்.*

*மறுநாள் 30.12.2024 திங்கள்கிழமை காலை 8.30 மணி அளவில் புறப்பட்டு பாளை ரோடு, 3 வது மைல், V.V.D சிக்னல், சிதம்பர நகர் மெயின்ரோடு, பிரையன்ட் நகர் 1வது தெரு கிழக்கு, காமராஜர் சாலை வழியாக காமராஜ் கல்லூரியில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு மாதம் ரூ.1000/ வழங்கும் "புதுமைப்பெண் விரிவாக்க திட்டத்தை துவக்கி வைக்கிறார்.*

*நிகழ்ச்சி முடிந்து காமராஜ் கல்லூரி, அக்சார் கம்பெனி சந்திப்பு, சிவந்தாகுளம் மாநகராட்சி பள்ளி ரோடு, பக்கிள்புரம், புதூர்கிராமம் கால்நடை மருத்துவமனை, ஆறுமுகச்சாமி அன்பு ஆசிரமம், ஆல்வின் ஹோட்டல், அண்ணா சாலை, பாளை ரோடு வழியாக கன்னியாகுமாரி செல்கிறார். டிச 29,30 ஆகிய இரு தேதிகளில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும், கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள அழைக்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

காவல் உதவி செயலியை தங்கள் செல்போனில்

# மாணவிகள் பதிவிறக்கம் செய்ய வேண்டும்!

## கல்லூரிகளுக்கு – அமைச்சர் முனைவர் கோவி. செழியன் வேண்டுகோள்!

*சென்னை, டிச.29-*

*மாணவிகள் காவல் உதவி செயலியை தங்கள் செல்போன்களில் பதிவிறக்கம் செய்வதை அனைத்துக் கல்லூரிகளும் உறுதி செய்ய வேண்டும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், ஆபத்துக் காலங்களில் உடனடியாக காவல்துறையை தொடர்பு கொள்ள உதவும் 'காவல் உதவி' செயலியை அனைத்துப் பெண்களும் குறிப்பாக மாணவிகள் தங்கள் செல்போன்களில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.*

*அவசர காலங்களில் சிவப்பு நிற `அவசரம்' என்ற பொத்தானை அழுத்துவதன் மூலமாக, பயனாளர் விவரம், தற்போதைய இருப்பிட விவரம் மற்றும் வீடியோ, கட்டுப்பாட்டு அறையில் பெறப்பட்டு காவல்துறையின் அவசர சேவை வழங்கப்படும்.*

*மாணவிகள் காவல் உதவி செயலியை தங்கள் செல்போன்களில் பதிவிறக்கம் செய்வதை அனைத்துக் கல்லூரிகளும் உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*



விருதுநகர் மாவட்டம், திருச்சுழி சட்டமன்றத் தொகுதி, என்.நெடுங்குளம் கிராம பொதுமக்கள் மற்றும் மாணவர் பயன்பெறும் வகையில் புதிய பேருந்து வழித்தடத்தினை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்து பள்ளி மாணவ மாணவியர்களுடன் பேருந்தில் பயனம் செய்தார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் கண்ணன், செல்லம், செந்தில், மாவட்ட கவுன்சிலர் தமிழ்வாணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கிழக்குத் தொகுதிக்குட்பட்ட கருப்பாயூரணி பகுதியில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அப்பகுதியில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் ஹக்கீம், வக்கீல் கலாநிதி, அழகு பாண்டி, இளங்கோவன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.